MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சங்க இலக்கியத்தில் பெண்களும், குடும்ப மேலாண்மையும்

**முனைவர் ம. ஆனந்தன்**
உதவிப் பேராசிரியர்,
அறிவியல் மற்றும் இதர மானுடவியல் துறைகள் -
நேரு பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் கல்லூரி,
கோவை- 641105

**முனைவர் அ.தீபக்**
உதவிப் பேராசிரியர்,
அறிவியல் மற்றும் இதர மானுடவியல் துறைகள் -
நேரு பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் கல்லூரி ,
கோவை- 641105

# Women and Family Management in Sangam Literature

**Dr.M. ANANDAN**
Assistant professor
Science and Humanities Dept- Tamil
Nehru Institute of Engineering and Technology-7214

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**Dr. A. DEEPAK**
Assistant professor
Science and Humanities Dept- Tamil
Nehru Institute of Engineering and Technology-7214

Abstract

Family is the fundamental social institution that sustains cultural continuity and social stability. Sangam literature portrays the family as the foundation of society and emphasizes the vital role of women in family management. This study analyzes marriage practices, motherhood, pregnancy rituals, childbirth, naming traditions, and hospitality as reflected in Sangam texts such as Tolkāppiyam, Kuruntokai, Natrinai, Purananuru, and Tirukkural. Though shaped by a patriarchal framework, Sangam women functioned as moral guides and efficient managers of domestic life, strengthening family cohesion and preserving core Tamil cultural values.

**Key Words:**
Sangam literature, family, management, women's role, motherhood, monogamy, polygamy, baby shower, childbirth, hospitality, Tamil culture

## முன்னுரை

குடும்பம் என்பது ஆண், பெண் உறவுகளை வளர்த்து சமூக மேம்பாட்டிற்கு அடிப்படையாகிறது. குடும்பம் என்பது சமூகத்தின் மிகச் சிறிய வட்டமாக திகழ்கிறது. ஒவ்வொரு குடும்பத்தின் சிறப்பும் சமூகத்தின் சிறப்பிற்கு வித்திடுவதாக ஒட்டுமொத்த சமூகத்தில் காணப்படும் நாகரீகம், முன்னேற்றம் ஆகியவை அச்சமூகத்தில் அடங்கியுள்ள குடும்பத் தன்மைகளைப் பொருத்து அமைகின்றது. குடும்பம் என்பது சமூகத்தின் மையக்கரு எனலாம்.

ஆண் மேலாண்மைச் சமூகம் பெண் தலைமையைப் பின் தள்ளியது என்றாலும் குடும்பம் என்ற கட்டமைப்பிற்கு வித்திட்டது குறிப்பிடத்தக்கதாகும். குடும்பம் என்ற இக்கட்டமைப்பின் முக்கியத்துவத்தை மனித சமுதாயத்தின் மிகத்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பமே ஆகும். இன்று நூற்றுக்கணக்கானச் சமுதாயங்கள் காலங்காலமாகப் பல்வேறு நிறுவனங்களை ஏற்படுத்திக் கொண்டு அதன் அமைப்பாலும், செயலாலும் வேறுபடுகின்றன. ஆனால் அனைத்திலும் குடும்பம் என்னும் நிறுவனமே மிகவும் இன்றியமையாத அடிப்படை அலகாகச் செயல்படுகிறது. அவ்வாறே மக்கள் வாழ்நாள் முழுவதும் எண்ணற்ற குழுக்களில் பங்கு பெற்று அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொண்டாலும் குடும்பம் என்னும் அமைப்பே முதலிடம் பெறுகின்றது. அக்குடும்பத்தை செம்மையாக நடத்தும் பெண்களின் குடும்ப மேலாண்மையைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச்சொற்கள் :

சங்க இலக்கியம், குடும்பம், மேலாண்மை, பெண்களின் பங்குs, தாய்மை, ஒருதார மணம், பலதார மணம், வளைகாப்பு, குழந்தைப் பேறு, விருந்தோம்பல், தமிழ் பண்பாடு

**சங்ககால குடும்பம்**

மனித இன வளர்ச்சியில் காட்டுமிராண்டி நிலையில் குழுமணமும், அநாகரீக நிலையில் இணைமணமும், நாகரீக நிலையில் ஒருதார மணமும் இடம்பெற்று இருந்ததாகச் சமூகவியலறிஞர்கள் கருதுகின்றனர். இனக்குழு வாழ்க்கையின் படிநிலை வளர்ச்சியின் இறுதி நிலையே ஒருதார மணமாகும். இவ்வொருதார மணமே குடும்பத் தோற்றத்தில் அடிப்படையாக அமைகிறது. குடும்ப வாழ்வின் தோற்றத்தில் தான் சமூக வாழ்வு நெறியின் அடித்தளம் அமைகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

சமூகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம் குடும்பமாகும். சமூகத்திற்கு குடும்பம் அடிப்படையாகிறது. குடும்பத்திற்குக் காதல் அடிப்படையாகிறது. காதலின் தொடர்ச்சியாகக் குழந்தைகளும், குடும்பமும் அமைகின்றன. சமூகத்தின் வளர்ச்சி நிலைகளுடன் குடும்பமும் வளர்ந்து வருகிறது. குடும்ப வகைகளாவன தனிக்குடும்பம், கலப்புக்குடும்பம், கூட்டுக் குடும்பம், விரிந்தக் குடும்பம் என்பனவாகும்.(1)

**சங்ககாலத்தில் பலதார மணக்குடும்பம்**

சங்ககாலத்தில் பலதார மணமுறையும் காணப்படுகின்றது. ஒருதார முறைப் பற்றி அதிகம் காணப்படினும், பலதார முறை வழக்கில் இருந்தது தெளிவு. இல்லத்திற்கு உரிமையுடையவளாக மணக்கப் பெற்றவள் தொன்முறைக் கிழத்தி ஆவாள். காமம் காரணமாக மணக்கப் பெற்றவள் காமப் பரத்தையர் ஆவர். தலைவன் மனைவியர் பலரைப் பெற்றிருப்பினும் அவருள் தொன்முறைக் கிழத்திக்கே உரிமையும், அதிகாரமும் வழங்கப் பெற்றன.

பாரி மகளிர் இருவரையும் ஒருவரையே மணக்கும் படி வினவுதல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. இதனை,

“யான் தர, இவரை கொண்மதி”(2)

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது.

**தாய்மை நிலை**

இலக்கிய மாந்தர்களில் உயர்ந்த நிலைக்குரிய பல பெயர்கள் இருப்பினும் தாய் என்ற உறவுக்கு அப்பெயர்கள் ஈடாகாது. சங்கத் தாய்மார்கள் தன் குழந்தைகளுக்கு அன்பு காட்டுதல் மட்டுமன்றிப் பாலூட்டுகின்ற காலத்தே

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

நற்பண்புகளையும், வீரத்தையும் ஊட்டி வளர்த்தனர்.

ஒரு குடும்பத்தில் தாயின் பங்கு மிக முக்கியமான ஒன்றாகும். குடும்பத்திலே பண்பைக்காட்டிப் போற்றியும், மனிதநேயத்தை அவர்களிடம் காட்டியும் சிறப்புப் பெறுபவள் தாய்.

உலகத்து உயிர்கட்கெல்லாம் இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் தாயன்பையே பெரிதாக மதித்திருப்பதைக் காணலாம். தலைவியின் மென்மையான அன்பினை,

“தாய்போல் கழறித் தழீஇக் கோடல்
ஆய்வினைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலையான” (3)

என்று தொல்காப்பியர் விளக்குகிறார். எனவே, உலகில் எல்லா உறவுகளிலும் தாய் அன்பே தலைசிறந்தது எனக் கருதுவதில் தொல்காப்பியருக்கு உடன்பாடு உண்டு எனலாம். இச்சிறப்பைக் கருதி உலகத்து உயிர்களிலே நல்லுறவு கொண்டாடத் தகுந்த ஒரே உயிர் தாய் தான் என்று கூறுகிறார்.

தொல்காப்பியர் தாய் என்ற ஒரு சொல்லை பொதுவாகக் கொண்டு நற்றாயையும், செவிலித் தாயையும் குறிப்பிட்டுள்ளார்.

“தாய் அறிவுறுதல் செவிலியோ டொக்கும்”(4)

என்ற நூற்பாவில் தாய் என்பது தலைவியை ஈன்ற தாயான நற்றாயைக் குறிக்க வந்தது என்றும், தாய் நிலை கண்டு தடுப்பினும், விடுப்பினும் என்பதில் தாய் என்பது செவிலித்தாயைக் குறிக்க வந்தது என்பதையும் உரையாசிரியர்களின் வழி அறிய முடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

## தாய்மையின் பெருமை

பெண்ணின் பெருமைகள் பலவாயினும் அனைத்தினும் தாய்மைப் பண்பே தலையாய சிறப்பும், பெருமையும் கொண்டதாகும். தன்னலம் கருதாத தொண்டு மனமே தாய்மை என்றும், பிறருக்கு ஈயும் அன்பு தாய்மை என்றும், தெய்வங்களுள் தலையாய தெய்வம் தாய் என்றும் பாரதி தாய்மையைப் பெரிதும் போற்றுகிறார்.

பெண்ணைப் பேணுவோர், கண்ணைப் பேணுவோர் பெண்ணுக்குக் கண் உண்டு என்கிறார்.

“மற்றைக் கருமங்கள் செய்தே - மனை

வாழ்ந்திடச் செய்பவள் அன்னை”

பெண் குழந்தை சிறுமியாகி, சிறுமி கன்னியாகுகின்ற பருவம் தான் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் பெரும் திருப்பத்தையும், பொறுப்பையும் ஏற்படுத்துகின்ற பருவம். அறிந்தும், அறியாமலும் இருக்கின்ற நிலை மாறி அறிய வேண்டியவற்றை அறிகின்ற பருவம். பட்டும் படாமலும் இருக்கின்ற நிலை மாறி பற்றுதல் ஏற்படுகின்ற காலம். வெள்ளைச் சிரிப்பு அகன்று வெள்ளையாய்ச் சிரித்தாலும் கள்ளச் சிரிப்பென்று பிறர் கற்பனை செய்யும் காலம். இளமைப் பருவத்தின் கடைவாயில், தாய்மைப் பருவத்தின் தலைவாயில். இந்தக் கன்னிப் பருவத்தில் தான் ஒரு பெண் கற்பு என்னும் தன்னுடைய அணிகலனைக் காத்த கவசமாய் ஏற்கின்ற காலம். இதில் கவனமாய் இருக்கின்ற கன்னியர்கள் கல்யாண சந்தைக்குத் தகுதியாகின்றார்கள். வானத்து மழையின் ஒரு பகுதி புனித நீராகவும், மறுபகுதி கழிவு நீராகவும் மாற்றம் பெறுவதைப் போல் இப்பருவத்தில் இருவகையில் தடம் மாறிப் போகின்ற கன்னியர்களும் உண்டு.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பெண் மகளாகப் பிறந்தபின் மனைவியாகி பிள்ளைக்குத் தாயாகி முடிவில் இறையாகின்றாள்.

‘தாயிற் சிறந்த கோவிலும் இல்லை’. ‘தாய் சொல்லை தட்டாதே’ அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் என்னும் பழமொழிகளில் தாய்மையின் பெருமை பேசப்பட்டதைக் காண முடிகின்றது.

**வளைகாப்பு**

களவு முடிந்து, கற்ப வாழ்க்கைக்குச் சென்ற தலைவனும், தலைவியும் இன்புற்று வாழ்கின்றனர். அவர்களின் இல்லற வாழ்வு சிறப்பாக அமைந்தமைக்கு எடுத்துக்காட்டாக, தலைவி தாய்மை நிலை அடைகிறாள். வளைகாப்பு என்பது மகளிர் அனைவருக்கும் முதல் குழந்தை தரிக்கும் பொழுது நடத்தப்படுவதாகும். மகளிர் பன்னிரு திங்கள் கருவுற்றிருத்தலும், குழந்தைபேறுப் பெற்ற மகளிர் நோயற்ற மகளிர் புளிப்புச் சுவையுடைய பொருட்களை விரும்புவர் என்பதையும் கன்னியராய் இருந்து பின் கொண்ட முதற்சூல் ஆதலின் கடுஞ்சூல் என்று கூறப்பட்டது.

குடநாட்டு வீரக்குடி மகளிர் கருக்கொண்டால், அவருக்குக் கரைத்த பசும் புளியை ஒரு வாளியின் வழியாக வாயில் வார்ப்பதைச் சடங்காகச் செய்வது தொன்று தொட்டு வருகின்றது எனவும், இதுவே பசும்புளி வேட்டைக்கு ஏதுமாகும்.

என்பதை,

“ஒதுங்கல் கெல்லாப் பசும்புளி வேட்கைக்

கடுஞ்சூல் மகளிர் போல நீர்கொண்டு”(6)

என்று குறுந்தொகையும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

"புளிங்காய் வேட்கைத் தன்று நின்
மலர்ந்த மார்பு இவள் வயா நோய்க்கே"(7)

என்று ஐங்குறுநூறும்,

"வயவுறு மகளிர் வேட்டு வனின் அல்லது
பகைவர் உண்ணா அரு மன்றினையே"(8)

என்று புறநானூறும் எடுத்துக்காட்டுகின்றன.

**குழந்தை பேறு**

குழந்தையைப் பன்னிரு மாதம் சுமந்தவள் தலைவி என்பதைக் குறுந்தொகை பாடல்,

"முந்நால் திங்கள் நிறை பொறுத் அசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூழ் மகளிர்"(9)

புதல்வனை ஈன்ற மகளிர் எண்ணெய் தேய்த்துக் குளிப்பர் என்பதற்குச் சான்றுகளாக,

"ஐயவி அணித்த நெய்யாட்டு ஈரணி" (9)
"நெய்யொடு இமைக்கும்"(11)

என்ற நற்றிணை அடிகள் அமைகின்றன. மனித குலம் நிலைபெற்று விளங்குவதற்கு மக்கள் பேறே காரணமாகும். இது இயற்கையின் இனப்பெருக்கம் இயல்பால் நிகழ்வதாகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

ஓர் ஆணும் பெண்ணும் அமைந்த குடும்பம் தன்னளவில் முற்று பெறாது. அதற்கு ஒரு நிலையான தொடர்ந்த இருப்பைத் தருவது குழந்தைப் பேராகும். குடும்ப அமைப்பைப் பேணி, அதனை மேலும் இறுக்கமாக்கி வலுவூட்டுவது குழந்தைகளேயாகும். “குடும்பத்தில் குழந்தைகள் பிறந்த பிறகு இந்தப் பிணைப்புக்கள் மேலும் வளர்கின்றன. பெற்றோர்களின் மனப்பாங்கு இதற்கு முன் ஓரளவிற்குச் சுயநலச் சார்பு உடையதாயிருப்பினும் குழந்தை பிறந்த பிறகு, அக்குழந்தையிடம் தன்னலமற்ற அன்பை காட்டுகின்றனர். இதற்கு முன் தம்பதிகளிடையே ஏதாவது மனக்கசப்பு இருப்பினும் கூட அது இத்தகைய பொதுவான அன்பின் மூலம் மறைந்து விடுகிறது. குழந்தை பிறந்த பிறகு அவர்கள் காதல் வாழ்க்கை புத்துயிர் பெறுகிறது என்று கூடச் சொல்லலாம்”(12)

‘மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லை தாம் வாழும் நாளே’ என்று மக்கட்பேற்றின் சிறப்பைப் புறநானூறு பின்வருமாறு கூறுகின்றது. இதனை,

“படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறு கை நீட்டி,
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்”(13)

(புறம் - 188)

அதாவது செல்வம் பலவற்றையும் உடையவராய் பலருடன் கூடி இருந்து உண்பவராயினும் அவர் பெற்ற செல்வத்தால் வாழ்வின் பயன் ஒன்றும் இல்லை என்று மக்கட் பேற்றின் அவசியத்தை விளக்குவதை உணர முடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**குழந்தை பிறப்பால் தலைவியின் உடல்நிலை மாறுதல்**

குழந்தை பிறப்பால் தலைவியின் உடல் நிலையில் மாற்றம் ஏற்படுவதை,

"நெய்யும் குய்யும் ஆடி மெய்யோடு
மாசு பட்டன்றி கலிங்கமும் தோளும்
திதலை மென் முலைத் தீம் பால் பிலிற்ற
புதல்வர் புல்லிப் புனிறு நாறும்மே"(14)

(நற் - 380)

என்ற பாடலில் பரத்தையிடம் சென்ற தலைவன், தன் மகன் நினைவால் வீடு திரும்புகிறான். மகனைக் காரணமாகக் கொண்டு தலைவியிடம் ஊடல் நிகழ்த்த எண்ணும் பொழுது தலைவி, மகன் ஈன்றதால் என் உடையும் மேனியும் மாசுற்றன. ஆகையால் நீர் பரத்தையர் சேரிக்கே செல்லுவாயாக என்றாள். பரத்தையரிடம் ஆடைகள் தூய்மையாக இருக்குமே தவிர உள்ளத் தூயவரல்ல என்று சுட்டிக் காட்டுகின்றாள் தலைவி.

**குழந்தையை ஈன்ற மகளிர் நீராடுதல்**

தம் கற்பு வாழ்க்கையில் கணவரின் இம்மையிலும், வறுமையிலும் குழந்தையைப் பெற்றெடுத்த மகளிரின் மார்புகளில் பால் அதிகமாக சுரப்பதற்காகவும், சுரப்பதனால் புலால் நாற்றம் ஏற்படாமல் இருப்பதற்காகவும் தெய்வத்தை வணங்கி குளத்து நீரில் குளிப்பர். இதனை மதுரைக்காஞ்சி,

"கணவர் உவப்ப புதல்வர்ப் பயந்து
புனைத்து ஏந்து இளமுலை அமுதம் ஊற

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

புலவுப் புனிறு தீர்ந்து, பொலிந்த சுற்றமொடு

வளமனை மகளிர் குளநீர் அயர"(15)

( ம. கா. 600-603)

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.

**குழந்தைக்குப் பெயரிடல்**

தந்தை வழியில் உள்ள முன்னோரின் பெயர்களையே குழந்தையருக்கு இட்டு வழங்குவது தமிழ்ச் சமுதாயத்தில் வழக்கமாகும்.

"அதன் பெரும் சிறப்பின் தந்தை பெயரன்" (16)

( ஐங் - 403)

தாத்தாவின் பெயரைப் பெற்ற பெயரன் ஆதலால் அவன் பேரன் என்று அழைக்கப்படுகிறான். சங்க காலத்தில் தந்தையின் பெயரையும், தாத்தாவின் பெயரையும் குழந்தைக்குச் சூட்டியிருக்கிறார்கள் என்பது இப்பாடலின் வழி புலப்படுகிறது. இவ்வாறு குழந்தைக்குப் பெயரிடும் வழக்கம் இன்று வரை சமுதாயத்தில் பின்பற்றப்படுகிறது என்பதைச் சங்க பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

**விருந்தோம்பல்**

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர். அம்மகளிர் விருந்தினரை வரவேற்கும் பண்புடையவர்கள் என்பதை,

"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மெல் இயர் குறுமகள் உறைவின்"(17)

(நற் - 142)

என்ற நற்றிணைப் பாடலின் வழி சுட்டப்படுகிறது. இரவு வாயிலை அடைப்பதற்கு முன் புதிய விருந்தினர் வந்துள்ளார்களா என்று ஆராய்ந்து அறிந்து வாயிலை அடைக்கும் பழக்கம் உடையவர்கள் சங்க கால மகளிர். இதனை,

"தவச் சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்

நீள் நெடும் பந்தர் ஊண் முறை ஊட்டும்

இல் பொலி மகடூஉம் போல"(18)

( புறம் - 331)

என்ற புறநானூற்றுப் பாடல் விளக்குகிறது. இல்லற வாழ்வின் அடிப்படை நிகழ்ச்சி விருந்தோம்பல் ஆகும். சங்க மகளிர் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். அதாவது மகளிர் தரும் விருந்து, தலைவன் தலைவி இணைந்து தரும் விருந்து, இல்ல விருந்து, ஊரவர் தரும் விருந்து, ஆடவர் தரும் விருந்து என்ற ஐந்து நிலைகளில் விருந்தோம்பல் செய்தனர்.

'அல்லிலாயினும் கற்பினும் மெல்லியள் குறுமகள்'

முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள் எனத் தலைவன் தலைவியின் சிறந்த பண்பான விருந்தோம்பல் பண்பைப் பாராட்டுகின்றான்.

நம் தமிழர்கள் நாகரிகத்திலும், பண்பாட்டிலும் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் பண்பாட்டின் மூலமாக சிறந்த அரங்களைச் செய்து சிந்தனையில் மேலோங்கி இருந்தினர். இவர்கள் மக்களுக்கு உதவி செய்வதைத் தலையாய கடமையாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இதில் முக்கியமான செயல் பசியைப் போக்குதல் ஆகும். இவர்கள் விருந்தினர் வரவேண்டும் என வேண்டிக் கொள்வார்கள். இதனை,

“நடுகல் கைதொழுது பரவம், ஒடியாது
விருந்து எதிர் பெறுவதில் யானே என ஐயம்”(19)

( புறம் 306 )

என்ற பாடலின் வழி நல்லூர் நன்முல்லையார் விலக்கியுள்ளார். இதன் வழியே மறக்குல இளையவள் ஒருத்தி தன்குடி முன்னோர்களில் நடுகற்களை நோக்கி இடைவிடாது விருந்தினர் வரப் பெறுவேனாக. என் கணவர் பகைவரை ஒழித்து விரைந்து வருக என்றும் வேண்டுவதாக அமைந்துள்ளது. இதன் மூலம் விருந்தினர் தம் இல்லம் நோக்கி இடைவிடாது எப்பொழுதும் வர வேண்டும் என்று வேண்டுவது அம் மறக்குல மங்கை மூலம் அறிய முடிகின்றது.

“கானவன் எய்த முளவு மான் கொழுங் குறை,
தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி, கிழங்கொடு
காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்,
ஓங்கு மலை நாடன், நின் நசையினானே!” (20)

(நற் - 85)

என்ற இப்பாடலில் மலைச்சாரலில் வேட்டுவன் எய்த முள்ளம் பன்றியின் கொழுவிய மணம் கமலும் கூந்தலையுடைய கொடிச்சி, கிழங்கொடு சேர்த்துச் சிறு குடியினருக்கும் பகிர்ந்து உண்ணக் கொடுத்தாள் என்பதை அறிய முடிகிறது. திணையரி சோறு, பால், தயிர், மோர், நெய் ஆகியன இவர்களது முக்கிய உணவாக இருந்தன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

திருவள்ளுவரும் விருந்தோம்பல் என்ற தனி அதிகாரத்தையே வகுத்து விருந்தோம்பலின் சிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார். இல்வாழ்வின் சிறப்பே வீடு தேடி வந்த விருந்தினரைப் பேணிப் பாதுகாப்பதுதான். என்பதை,

"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"(21)

(குறள் - 81)

என்ற குறளில் தெளிவுபடுத்தியுள்ளார். திருவள்ளுவர், விருந்தளிக்கும் பொழுது இன்முகத்துடன் பரிமாற வேண்டும், இல்லையெனில் விருந்தின் தன்மைக் கெட்டுவிடும் என்பதனை,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" (22)

(குறள் - 90)

என்ற குறள் மூலம் வள்ளுவர் விருந்தோம்பலின் பண்பினைக் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

சங்ககாலத்தில் வாழ்ந்த மகளிர் குடும்பத்தை சிறந்த முறையில் மேலாண்மை செய்தனர் என்பதையும், பெண்கள் கன்னி மகளிராக இருந்து கற்பு நிலைக்குச் சென்றவுடன் வளைகாப்பு, குழந்தைப் பெற்றல், விருந்தோம்பல் போன்ற பழக்க வழக்கங்களை மகளிர் கடைப்பிடித்து இல்லறத்தை சிறப்பான முறையில் வழிநடத்திச் சென்றுள்ளதை சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**அடிக்குறிப்புகள்** :

1. அ. ஆறுமுகம், சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை அரசு, ப-11
2. புறநானூறு, பா. எண் -201
3. தொல்காப்பியம், நூ-1119
4. மேலது, நூ-1084
5. அ. ஆறுமுகம், சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை அரசு, ப- 262
6. குறுந்தொகை, பா. எண் -287
7. ஐங்குறுநூறு, பா. எண் -51
8. புறநானூறு, பா. எண் -20
9. குறுந்தொகை, பா. எண் -28
10. நற்றிணை, பா. எண் -40
11. மேலது, பா. எண் -370
12. மு.விவேகானந்தன், பெருமை பெறும் பெண்ணினம், ப-22
13. புறநானூறு, பா. எண் -188
14. நற்றிணை, பா. எண் -380
15. மதுரைக்காஞ்சி, பா. அடி 600-603
16. ஐங்குறுநூறு, பா. எண் -403
17. நற்றிணை, பா. எண் -142
18. புறநானூறு, பா. எண் -331
19. மேலது, பா. எண் -306

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

20. நற்றிணை, பா. எண் -85

21. குறள்-81

22. மேலது குறள்-90

**துணை நூற்பட்டியல்**


1. சோம சுந்தரனார். பொ.வே. (உ.ஆ), குறுந்தொகை, கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 79, பிரகாசம் சாலை, சென்னை, மு.ப.2008
2. சோம சுந்தரனார். பொ.வே. (உ.ஆ), ஐங்குறுநூறு, கழக வெளியீடு திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. பால சுப்பிரமணியன் கு.வெ-நற்றினை ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை -98 மு.ப.2004
4. மேலும், புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை -98, மு.ப.2004
5. இளம்பூரணர் (உ.ஆ) – தொல்காப்பியம் - பொருளதிகாரம் கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு,1969.
6. தண்டபாணி .சொ.(உ.ஆ)-திருக்குறள் , கழக வெளியீடு, சென்னை மறுபதிப்பு 1956.
7. விவேகானந்தன், பெருமை பெறும் பெண்ணினம், மணிவாசகர் பதிப்பகம்,31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை,108 , மு.ப. 2011
8. ஆறுமுகம். அ, சங்க இலக்கியத்தில் குடும்பம் உடைமை, அரசு பாவேந்தர் பதிப்பகம், திருமழபாடி , திருச்சி, மு.ப. 1947.